செய்தி வெளியீடு எண்: 439 நாள்: 07.07.2018

# செய்தி வெளியீடு

**தமிழகத்திலுள்ள மாநில பல்கலைக்கழகங்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அதற்கு இணையான பதவியில் உள்ள பணியாளர்களுக்கு ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் திருத்திய ஊதிய விகிதம் மற்றும் படிகளை வழங்குவது குறித்து**

தமிழக அரசு, அரசுப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசின் 7வது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் திருத்திய ஊதிய விகிதம் மற்றும் படிகளை 01.01.2016 முதல் கருத்தியலாகவும், 01.10.2017 முதல் பணப்பயனாகவும் வழங்கியது.

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் ஆளுகைக்குட்பட்ட மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அதற்கு இணையான பதவியில் உள்ள பணியாளர்களுக்கான திருத்திய ஊதிய விகிதம் மற்றும் படிகள், மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை அமைக்கப்படும் ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது, மத்திய அரசால் அமைக்கப்பட்ட 7வது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், மேற்கண்ட பணியாளர்களுக்கு திருத்திய ஊதிய விகிதம் மற்றும் படிகளை வழங்குவதற்கான மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழுள்ள உயர் கல்வித்துறை இயக்குநரின் பரிந்துரை மீது

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணைக்கிணங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் ஆளுகைக்குட்பட்ட, மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அதற்கு இணையான பதவியில் உள்ள பணியாளர்கள் தங்களது திருத்திய ஊதிய விகிதம் மற்றும் படிகளை **01.01.2016** முதல் கருத்தியலாகவும், **01.10.2017** முதல் பணப்பயனாகவும் பெறலாம். மேலும் மேற்கண்ட பணியாளர்கள் **01.10.2017** முதல் **30.06.2018** வரையிலான திருத்திய ஊதிய விகித நிலுவைத் தொகையினை பணமாகவும் பெறலாம். இதன் மூலம், மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அதற்கு இணையான பதவியில் உள்ள பணியாளர்கள் **மாதம் ஒன்றுக்கு ரூ.16,000/–லிருந்து ரூ.40,000/– வரை ஊதிய உயர்வு பெறுவர்.** இத்திருத்திய ஊதிய விகிதத்தை நடைமுறைப்படுவதால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ.500 கோடி கூடுதல் நிதித்செலவினம் ஏற்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**